# TAMIL

---

***Maximum Marks: 80***

***Time Allowed: Three hours***

*(Candidates are allowed **additional 15 minutes** for **only** reading the paper.*
*They must **NOT** start writing during this time).*

---

*Answer **Questions 1, 2 and 3 in Section A** and **four** questions from **Section B** on **any three** out of the four prescribed textbooks.*

*The intended marks for questions or parts of questions are given in brackets [ ].*

---

## SECTION A

## LANGUAGE - 40 MARKS

**Question 1** **[15]**

**Write a composition in approximately 400 words in Tamil on any *one* of the topics given below:**

**கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 400 வார்த்தைகளில் ஒரு கட்டுரை தமிழில் எழுதுக**

(i) உன் பகுதியில் பரவிய /பரவும் உலகளாவிய தொற்றுநோய் கோவிட்-19 (Covid19 Pandemic) குறித்தும், பரவாமல் தடுக்க எடுத்த / எடுக்கும் உரிய நடவடிக்கை பற்றியும், தடுப்பூசி கண்டுபிடிப்பு குறித்தும் கட்டுரை ஒன்று எழுதுக.

(ii) மனித வாழ்வுக்கு ஆதாரமானது நீர். நீரின் மகத்துவம், தேவைகள், பயன்படுத்தும் விதம், இதன் பற்றாக்குறையை நீக்க மேற்கொள்ள வேண்டிய வழி முறைகள் ஆகியவற்றை விளக்கி கட்டுரை ஒன்றை எழுதுக.

(iii) முன்பைக் காட்டிலும் மிக அதிகமாக தகவல் தொழில் நுட்பச் சாதனங்களை நாம் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மை, தீமைகளை

(iv) இன்றைய சூழ்நிலையில் நிகழ்நிலை வகுப்புகள் (ONLINE CLASSES) காலத்தின் கட்டாயம் - இக் கருத்தை ஏற்று அல்லது மறுத்து உனது கருத்துகளைக் கட்டுரையாக்குக.

---

(v) பாரம்பரிய உணவு நம் உடல் ஆரோக்கியத்திற்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கும் பெரிய அளவில் நம்பிக்கை அளிக்கிறது விளக்குக.

(vi) கீழ் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு மூலச் சிறுகதையை எழுதுக :

(a) அந்த சோம்பேறி மனிதன் பகற்பொழுதில் மரத்தினடியில் நன்றாக உறங்கிக் கொண்டு இருந்தான்.அப்பொழுது ....... என்று தொடங்கும் வரிகளில் கதை ஒன்று எழுதுக.

(b) “இந்த இரயில் நட்பு என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக மாறி விட்டது “என்று முடியும் வரிகளில் கதை ஒன்றை எழுதுக.

**Question 2**

**Read the passage given below carefully and answer the questions that follow, using your own words in Tamil:**

**பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி:**

வான் மறை தந்த வள்ளுவருக்கு முன்னர் வாழ்ந்த புலவர்கள், அவருக்கு நல்லதொரு பின்னணியை அமைத்துத் தந்துள்ளனர். அந்தப் பின்னணியை உறுதுணையாகக் கொண்டு அவர் கவர்ச்சிமிகு கலைக்கோயிலைக் காமத்துப் பாலில் நிறுவியுள்ளார்.பண்டை அகப்பொருள் பாடல்களுள்,உரிப்பொருளோடு கருப்பொருளும் சிறப்பிடம் பெற்றுள்ளன.வள்ளுவர் கருப்பொருளை மிகக் குறைவாகவே பயன் படுத்தியுள்ளார்.உள்ளத்து உணர்ச்சி வழி நிற்கும் ஒழுகலாறாகிய உரிப்பொருளுக்கே அவர் முதன்மையிடம்கொடுத்துள்ளார். கருப்பொருளைக் கற்பனை வளத்திற்குத் தூண்டுகோலாகவும், நிலைக்களனாகவும் விளங்குமாறு வள்ளுவர் கையாண்டுள்ளார். உரிப்பொருளின் தன்மையை விளக்குகின்ற பொழுது அவருடைய உள்ளம் பழைய அகப்பொருள் மரபினைக் கண்மூடித் தனமாகப் போற்றவில்லை.அதற்கு மாறாகப் பழைய மரபினைப் புறக்கணிக்கவும் இல்லை.ஊடலுக்குக் காரணமாகப் பழைய அகப்பொருள் இலக்கண மரபு பரத்தையர் பிரிவைக் கூறும்.ஆனால் வள்ளுவரோ “இம்மை இப்பிறவியில் இரு மாதரை“ யாரும் தம் சிந்தையாலும் தொடக் கூடாது என்னும் உயர்ந்த குறிக்கோளை உலகிற்கு உணர்த்திய சான்றோர்.எனவே ஊடலுக்கு அவர் புது வகையான காரணங்களைப் படைத்து மொழிந்துள்ளார்.

புதிய புதிய தோற்றத்தை எழுப்பும் பாட்டுதான் சிறந்த பாட்டு என்பர்.எளிதில் அகற்றக் கூடிய ஒருபுற ஒப்பனையில் தோன்றுவது பாட்டாகாது.வாழ்க்கையாகிய அழகிய வேரிலிருந்து கற்பனை நீரால் அலர்கின்ற கற்பக மலரே சிறந்த பாட்டு.இத்தகைய வாடா மலர்கள் வள்ளுவருடைய கலைப் பூங்காவாகிய காமத்துப் பாலில் புதுமைப் பொலிவுடன் பூத்துக் குலுங்குகின்றன.

காமத்துப் பாலில் மனிதவாழ்க்கையின் முழு நிறைவுத் தன்மையை நம் உள்ளத்தில் ஆழப் பதியுமாறு வள்ளுவர் செய்துள்ளார். தலைவன்,தலைவி ஆகிய இருவரும் இன்பத்தில் மூழ்கித் திளைப்பதைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டும் போது திருவள்ளுவருடைய உள்ளத்தில் இருவகையான கற்பனைகள் வேலை செய்துள்ளன என்று கருதினால் அது தவறாகாது.உள்ளத்தின் அடித்தளத்தினின்று உணர்ச்சிப் பெருக்கோடு வெளிப்படுகின்ற கற்பனை ஒன்று.மற்றொன்று உணர்ச்சிப் பெருக்கில் வந்தவற்றிற்குத் தக்க வடிவம் கொடுப்பது. உணர்ச்சிப் பெருக்கே உயிர் சார்ந்த உயர் உடம்பாம் .

கேள்விகள்:

(i) கருப்பொருள் ,உரிப்பொருள் ஆகியவற்றை திருவள்ளுவர் எங்ஙனம் பயன்படுத்தியுள்ளார் ? **[3]**

(ii) “பரத்தையர் பிரிவு “வள்ளுவத்தில் விலக்கப் பட்டதேன் ? **[3]**

(iii) மனித வாழ்வின் முழு நிறைவுத் தன்மையை வள்ளுவர் எங்ஙனம் உள்ளத்தில் பதியச் செய்துள்ளார் ? **[3]**

(iv) கீழ்க் கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(a) வள்ளுவர் காமத்துப் பாலில் நிறுவியது **[1]**

(1) கலைக்கோயில்

(2) சிலைக்கோயில்

(3) உரிப்பொருள்

(4) கருப்பொருள்

(b) வள்ளுவர் மிகக் குறைவாகப் பயன்படுத்தியுள்ளது **[1]**

(1) முதற்பொருள்

(2) கருப்பொருள்

(3) அகப்பொருள்

(4) உரிப்பொருள்

(c) புதிய புதிய தோற்றத்தை எழுப்பும் பாட்டு **[1]**

(1) சிறந்த பாட்டு

(2) புரியாத பாட்டு

(3) இலக்கணப் பாட்டு

(4) பாட்டாகாது

(v) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(a) கற்பனை நீரால் அலர்கின்ற -------------- சிறந்த பாட்டு **[1]**

(1) வாடா மலரே

(2) கற்பக மலரே

(3) மல்லிகை மலரே

(4) வண்ண மலரே

(b) திருவள்ளுவரின் உள்ளத்தில் ---------- கற்பனைகள் வேலை செய்துள்ளன **[1]**

(1) மூவகையான

(2) பல வகையான

(3) இருவகையான

(4) ஒரேவகையான

(c) உணர்ச்சிப் பெருக்கே ---------- சார்ந்த உயர் உடம்பாம் **[1]**

(1) உயிர்

(2) உடல்

(3) மனம்

(4) எண்ணம்

**Question 3**

**(A)** **Correct the following sentences and rewrite as per the instructions given:**

**கீழ்க்கண்ட வாக்கியங்களில் பிழை நீக்கி கூறியபடி எழுதுக.**

பிழை நீக்கி எழுதுக :

(i) நாளை என் தந்தை உறவினர் வீட்டு திருமணத்திற்குச் சென்றார். **[1]**

(ii) என் அத்தை என்னை நன்றாகப் படிக்கும்படி கூறியது. **[1]**

(iii) பிழை நீக்கி எழுதுக: **[1]**

(a) மாடுகள் தோட்டத்தில் மேய்ந்தது

(b) மாடுகள் தோட்டத்தில் மேய்ந்தன

(c) மாடு தோட்டத்தில் மேய்ந்தன

(d) மாடுகள் தோட்டங்களில் மேய்ந்தது

(iv) சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுத்து எழுதுக : **[1]**

(a) இனையம் உலகத்தை இணைக்கும்

(b) இணையம் உலகத்தை இணைக்கும்

(c) இனையம் உலகத்தை இனைக்கும்

(d) இணையம் உலகத்தை இனைக்கும்

(v) சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுத்து எழுதுக: **[1]**

(a) அகலப் படிக்காதே ;ஆழ்ந்து படி

(b) அகளப் படிக்காதே ;ஆழ்ந்து படி

(c) அகலப் படிக்காதே ;ஆள்ந்து படி

(d) அகளப் படிக்காதே ;ஆள்ந்து படி

**(B)** **Use the idioms in the sentence as per the instructions given :**

**வாக்கியத்தில் அமைத்து எழுதுக** :

(i) நகமும் சதையும் போல **[1]**

(ii) வாழையடி வாழையாய் **[1]**

சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்து நிரப்புக :

(iii) ராமு தன் தேர்வுக்கு ------------ படித்தான் **[1]**

(a) அணி அணியாகப்

(b) ஊணுறக்கமின்றிப்

(c) கையும் களவுமாகப்

(d) கொடி கட்டிப்

(iv) அந்த ஊரிலேயே -------------- மிகுந்த குடும்பம் அதுதான் **[1]**

(a) சீரும் சிறப்பும்

(b) கண் துடைப்பு

(c) விதி விலக்கு

(d) சந்து பொந்து

(v) கண்ணன் இருவருக்கும் பதில் கூற முடியாது ___________ தவித்தான் **[1]**

(a) கீரியும் பாம்பும் போல்

(b) போற்றிப் புகழ்ந்து

(c) நாளும் கிழமையும்

(d) இருதலைக் கொள்ளியாய்

## SECTION B
## LITERATURE - 40 MARKS

*Answer **four** questions from this section on **any three** out of the four prescribed textbooks.*

**பின்வரும் வினாக்களுள் ஏதேனும் நான்கனுக்கு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மூன்று பாடப் புத்தகங்களிலிருந்து விடையளி**

## பொது தமிழ் (PODHU TAMIL)

**Question 4**

“புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி
நெடுந்தேர் ஊர்மதி வலவ”

(i) வெளவால் மாலையில் எங்குச் செல்லும் ? **[1]**

(ii) வெளவாலின் தோற்றத்தைக் கூறுக . **[2]**

(iii) மணமகளின் கூந்தலைப் போல மணந்தது எது ? **[2]**

(iv) வினைமேற்சென்ற தலைவனிடம் தூது வந்த பாணன் தெரிவித்த செய்தி யாது ? **[5]**

**Question 5** **[10]**

வினைத்திட்பம் என்னும் தலைப்பில் வள்ளுவர் கூறியுள்ளனவற்றை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய் ?

**Question 6** **[10]**

கண்ணகி சூளுரைத்தது ஏன் ?நகர மாந்தர் மயங்கிக் கூறியன யாவை ? இதற்குரிய காரணங்கள் யாவை ?

## கதை கோவை (KADHAI KOVAI)

**Question 7**

“மாட்டைப் பாரும் ,25 ரூபா” என்றார்.

(i) பால்வண்ணம் பிள்ளை மெக்ஸிகோ எங்கு இருப்பதாக அலுவகத்தில் கூறினார் ? **[1]**

(ii) பால்வண்ணம் பிள்ளையின் குடும்ப நிலை யாது ? **[2]**

(iii) பால்வண்ணம் பிள்ளை பசுமாட்டை எவ்வாறு ஏன் விற்றார் ? **[2]**

(iv) பால்வண்ணம் பிள்ளை பிடிவாத குணமுடையவர் என்பதைத் தக்க சான்றுடன் விளக்குக . **[5]**

**Question 8** **[10]**

‘வேலி’ சிறு கதையின் தலைப்பு எவ்வாறு பொருந்துகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக .

**Question 9** **[10]**

சொந்த வீடு கட்டுவதைப் பற்றிய உன் கருத்தை இக் கதையின் வழி நிறுவுக

## சினேகிதி (SINEKITHI)

**Question 10**

“நீ அந்த சேதுராமனுடன் பழகுவதை நிறுத்த மாட்டாயா ?” என்றேன்

(i) துரையின் இளவயதுச் சிநேகிதி யார் ? **[1]**

(ii) துரை வேலை பார்க்கும் பத்திரிக்கை ஆசிரியரின் மகள் யார்?அவள் யாரைத் திருமணம் செய்து கொண்டாள் ? **[2]**

(iii) லலிதா ஒரு சிறந்த மனைவியாக விளங்குகிறாளா ? ஆராய்ந்து கூறுக. **[2]**

(iv) சேதுராமன் பாத்திரம் இக்கதையின் திருப்புமுனை என்பதை எக்காரணங்களால் விளக்குவாய் ? **[5]**

**Question 11** **[10]**

காந்தா , நாகம்மாள் இருவரின் பண்பு நலன்களை விவரித்து இப்பாத்திரங்கள் நாவலின் கதையோட்டத்திற்கு எவ்வாறு துணை செய்கிறது என ஆராய்க .

**Question 12** **[10]**

நாராயணசாமியே இந்நாவலின் கதாநாயகன் என்பதை உன் பார்வையில் விளக்குக.

## யோன் கண்ட ஏலங்கி (YON CANDA ELANGI)

**Question 13**

எங்களுக்குத் துணையாக வந்தவர், ”இதுதான் இராவணன் வெட்டு” என்றார்.

(i) டாக்டர்.மு.வ.அவர்கள் எங்கிருந்து இக்கடிதத்தை எழுதுகிறார் ? **[1]**

(ii) நாகத்தீவு குறிப்பு வரைக **[2]**

(iii) சீதாவாகை என்ற பெயர் அந்த இடத்திற்கு ஏன் வந்தது என நீ நினைக்கிறாய் ? **[2]**

(iv) கதிர்காமத்தை நம்நாட்டு முருகன் கோவில்களோடு ஒப்பிட்டு எழுதுக **[5]**

**Question 14** **[10]**

கடித இலக்கியத்தில் தமிழிலக்கியம் எவ்வாறு நயமுற எடுத்தாளப் பட்டுள்ளது ?

**Question 15** **[10]**

நீர் வீழ்ச்சிகள் மக்கள் மனதை குழந்தையாக்குபவை என்ற கூற்றை நீ எவ்வாறு உணர்கிறாய் ?